# <u>சாதாரணக்கூட்டம்</u>

**பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2020 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் நாள் புதன் கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.**

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

## <u>பொருள் : 01</u>

என்.ஜி.ஆர் சாலையில் உள்ள பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்களில் உள்ள கடை உரிமையாளர்கள் மற்றும் பணிபுரியும் ஊழியர்களுக்கு கழிப்பிடம் இல்லாததால், ஆண், பெண் என இருபாலருக்கும் தனித்தனியாக வணிக வளாகத்தின் முதல் தளத்தில் நான்கு இடங்களில் கழிப்பிடம் கட்டுவதற்கும் மற்றும் தண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகிய பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.60 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1171/2020/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020—2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## <u>பொருள் : 02</u>

வார்டு எண் :08 பனப்பாளையம் இட்டேரி வீதியின் கடைசி பகுதி மேடான பகுதியில் அமைந்துள்ளதால், அழுத்தம் குறைந்து குடிநீர் சரிவர செல்வதில்லை. மேலும், சேரன் நகர் பகுதியில் இரண்டாவது வீதியில் குடிநீர் குழாய் மழைநீர் வடிகால் உள்ளே செல்வதால், அடைப்பு ஏற்பட்டு மழைநீர் செல்லாமல் ஆங்காங்கே தேங்கி உள்ளது. எனவே மழைநீர் தேங்கா வண்ணம் பைப்லைன் மாற்றி அமைக்கப்பட வேண்டும். எனவே மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.60 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 1040/2020/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020—2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## <u>பொருள் : 03</u>

பல்லடம் நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்திற்கு எதிர்புறம் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான மயானத்தின் நான்கு பக்கமும் சுற்றுச்சுவரை உயர்த்தவும், புதியதாக மின் விளக்குகள் அமைக்கவும், தரைத்தளக் கற்கள் பதிக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள ஆழ்துளைக் கிணற்றிலிருந்து மயானம் வரை குழாய் அமைத்து பிவிசி டேங்க் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சம் ஆகும். பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 01.09.2020 தேதிய முன் அனுமதி வழங்கி உள்ளதை மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்: 1040/2020/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## <u>பொருள் : 04</u>

வார்டு எண் :08 பனப்பாளையம் பழனிச்சாமி நகரில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 5HP மின்மோட்டார் பொருத்தப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் ஆனதாலும், மிகவும் பழுதடைந்து இயக்க முடியாமலும், உள்ளே பொருத்தப்பட்ட G.I பைப்லைன் துருப்பிடித்து பயன்படுத்த முடியாத நிலையிலும் உள்ளது. எனவே ஆழ்துளைக் கிணற்றில் புதியதாக மின்மோட்டார், கேபிள் மற்றும் UPVC குழாய் பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.80 இலட்சம் ஆகும். பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 31.08.2020 தேதிய முன் அனுமதி வழங்கி உள்ளதை மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்: 1040/2020/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## <u>பொருள் : 05</u>

நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் இட்லி பாய்லர் மற்றும் கிரைண்டர் வாங்கி 5 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால், தற்போது பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, பொதுமக்கள் அவசியம் கருதி, பாய்லர் புதிதாக வாங்குவதற்கும், கிரைண்டர் பழுது பார்ப்பதற்கு ஆகும் தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00 இலட்சம் ஆகும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் 04.09.2020 தேதிய முன் அனுமதி வழங்கி உள்ளதை மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்: 909/2020/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## <u>பொருள் : 06</u>

வார்டு எண் :08 பனப்பாளையம் பழனிக் கவுண்டர் வீதியில் உள்ள குடிநீர் அல்லாத உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் மேல்நிலைத் தொட்டியின் அடிப்பகுதி மற்றும் சுற்றிலும் நீர் கசிவு ஏற்பட்டு பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே மேல்நிலைத் தொட்டியை சரி செய்து வர்ணம் பூசும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.65,000/– ஆகும். பணியின்

அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 01.09.2020 தேதிய முன் அனுமதி வழங்கி உள்ளதை மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்: 1040/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 07

பல்லடம் நகராட்சி அண்ணா பேருந்து நிலைய வளாகத்திற்குள் உள்ள பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடத்தை அப்புறப்படுத்த 28.08.2020ல் பொது ஏலம் நடைபெற்றது. இந்த பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் மற்றும் ஏலம் கோரிய விபரம் கீழ்க்கண்டவாறு :

(ந.க.எண்: 116/2016/இ1)

| வ. எண் | ஏலத்தாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலம் கோரிய அதிகபட்ச ஏலத் தொகை |
|---|---|---|
| 1 | திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர்,<br>1/593, மகாலட்சுமி நகர்,<br>கே.செட்டிபாளையம், தாராபுரம் ரோடு,<br>திருப்பூர் – 641 604 | ரூ.7400/– |
| 2 | திருமதி.V.கோமதி, ஒப்பந்ததாரர்,<br>17/3, திருவள்ளுவர் வீதி,<br>பல்லடம். | ரூ.7600/– |
| 3 | திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர்,<br>3/715–C, சக்தி நகர்,<br>காளிவேலம்பட்டி (அ),<br>பல்லடம் – 641 662. | ரூ.7700/– |

மேற்கண்ட மூன்று ஏலத்தாரர்களில் அதிகப்படியான ரூ.7,700/–க்கு ஏலம் கோரப்பட்ட திரு.V.கருப்பசாமி, 3/715–C, சக்தி நகர், காளிவேலம்பட்டி (அ), பல்லடம் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ள அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களால் 03.09.2020 ஆம் தேதி முன் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்கண்ட பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 08

பல்லடம் நகராட்சி என்.ஜி.ஆர் சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வாரச்சந்தை நடைபெற்று வருகிறது. வாரச்சந்தையில், சுற்றுச்சுவர் மற்றும் கேட் இல்லாத காரணத்தினால், சுகாதாரச் சீர்கேடு மற்றும் சமூக விரோத செயல்கள் நடைபெற்று வருவதாக தெரிய வருகிறது. எனவே, வாரச்சந்தை பகுதிக்கு பாதுகாப்பு நலன் கருதி சுற்றுச்சுவர் மற்றும் கேட் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 1040/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**<u>பொருள் : 09</u>**

பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வடுகபாளையம் கிராமம், க.ச.எண் 32/4B, 42/2A1B ல் 1.78 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு.J.சசிக்குமார் என்பவர் அனுமதி கோரியதன் பேரில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களால் ந.க.எண்.897/2019/திம–1, நாள்.25.08.2020 ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி தார்சாலைகள் மற்றும் மின்கம்பங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் 26.06.2020 அன்று சான்று வழங்கியுள்ளார். தெரு விளக்கு மின் கம்பம் அமைக்க மின்வாரியத்திற்கு ரூ.1,45,360/–, வங்கி வரவோலை எண்.585893, நாள்.10.07.2020 மற்றும் குடிநீர் குழாய் அமைப்பதகான தொகை ரூ.63,000/– ஐ நகராட்சி கருவூலத்தில் இரசீது எண்.155/01/01/20–21/0003477, நாள்.13.07.2020 ன் படி செலுத்தியுள்ளார். நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதலில் தெரிவித்துள்ளவாறு அரசாணை எண்:79 வீட்டுவசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள்.04.05.2017 ன் படி விதி எண்:3 மற்றும் 9 ன் கீழ் செலுத்த வேண்டிய பரிசீலனைக்கட்டணம் மற்றும் மொத்த இடத்தின் விற்பனை மதிப்பில் அரசு கணக்கில் செலுத்த வேண்டிய 3% தொகையாக ரூ.30,000/– ஐ அரசு கணக்கில் நாள்.11.09.2020 ல் செலுத்தியுள்ளனர். எனவே, மேற்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சியின் பராமரிப்பிற்கு தானமாக பெற்றுக்கொள்ளவும், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

உத்தேச மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.003/2019/எப்1)

**<u>பொருள் : 10</u>**

பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நாரணாபுரம் கிராமம், க.ச.எண் 243/5B ல் 1.06 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திருமதி.K.சாந்தாமணி மற்றும் இருவர் ஆகியோர் அனுமதி கோரியதன் பேரில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களால் ந.க.எண்.662/2019/திம–1, நாள்.20.06.2020 ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி தார்சாலைகள் மற்றும் மின்கம்பங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் 24.02.2020 அன்று சான்று வழங்கியுள்ளார். தெரு விளக்கு மின் கம்பம் அமைக்க மின்வாரியத்திற்கு ரூ.85580/–, வங்கி வரவோலை எண்.016689, நாள்.19.03.2020 மற்றும் குடிநீர் குழாய் அமைப்பதகான தொகை ரூ.45000/– ஐ நகராட்சி கருவூலத்தில் இரசீது எண்.155/01/01/19–20/0027211, நாள்.03.03.2020 ன் படி செலுத்தியுள்ளார். நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதலில் தெரிவித்துள்ளவாறு அரசாணை எண்:79 வீட்டுவசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள்.04.05.2017 ன் படி விதி எண்:3 மற்றும் 9 ன் கீழ் செலுத்த வேண்டிய பரிசீலனைக்கட்டணம் மற்றும் மொத்த இடத்தின் விற்பனை மதிப்பில் அரசு கணக்கில் செலுத்த வேண்டிய 3% தொகையாக ரூ.81,450/– ஐ அரசு கணக்கில் நாள்.02.09.2020 ல் செலுத்தியுள்ளனர். எனவே, மேற்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சியின் பராமரிப்பிற்கு தானமாக பெற்றுக்கொள்ளவும், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

உத்தேச மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.121/2020/எப்1)

## பொருள் : 11

கல்லம்பாளையம் பகுதிக்கு குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கான தண்ணீர் ஒன்பதாம் பள்ளம் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து விநியோகம் செய்யப்படுவதால் கல்லம்பாளையம் மற்றும் குறிஞ்சி நகர் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தண்ணீர் சென்று அடையும் போது அதன் அழுத்தம் குறைந்து சீரான முறையில் விநியோகம் செய்ய முடிவதில்லை. மேலும், ஒன்பதாம் பள்ளம் பகுதியில் இருந்து கல்லம்பாளையம் வரை சுமார் 3 கி.மீ தூரம் உள்ளதால் மேற்கண்ட பிரச்சினை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி, குடிநீர் பணி என்பதால், வார்டு எண் :03 தெற்குபாளையம் பேருந்து நிறுத்தம் பக்கத்தில் உள்ள காலியிடத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்டத் தொட்டி (G.L.Sump) அமைத்து, மின்மோட்டார் (ம) பைப்பு லைன் பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1171/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 12

பல்லடம் நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் "Jal Sakthi Abhiyan" மற்றும் "SuWaSeM" 2019–2020 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், பல்லடம் நகராட்சி தனி அலுவலர் தீர்மான எண் :135/2020 நாள் : 20.08.2020 ன் அடிப்படையில் கீழ்க்கண்ட பணிக்கு 25.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் : 01 மேற்கு கல்லம்பாளையம் ஓடையை (SF No :204) தூர் வாரி, Percolation Pit மற்றும் இறக்கை சுவர் (Wing Wall) அமைத்து நீர்நிலைகளை மேம்படுத்தும் பணி | 22.60 | திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.24% குறைவு |
| | | | திருமதி.V.கோமதி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.80% அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண் 725/2019/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 13**

பல்லடம் ஊராட்சி ஒன்றிய குழு கூட்ட நடவடிக்கைகள் மூலம் நிறைவேற்றப்பட்ட தீர்மான எண் :94, நாள் :16.03.2020 ன் அடிப்படையில் ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், பல்லடம் அவர்களின் கடித ந.க.எண் : 390/2020/அ2 நாள் : 13.08.2020 மற்றும் 09.09.2020 ன் படி பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்து, தற்போது ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த 4 ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகள் மற்றும் 5 நடுநிலைப் பள்ளிகள் என மொத்தம் 9 பள்ளி கட்டிடங்களை பல்லடம் நகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்கண்ட 9 பள்ளிக் கட்டிடங்கள் அனைத்தும் பல்லடம் நகராட்சி ஆணையாளர், ஊராட்சி ஒன்றிய ஆணையர், பல்லடம், ஊராட்சி ஒன்றிய உதவிப் பொறியாளர் மற்றும் பல்லடம் நகராட்சிப் பொறியாளர் ஆகியோரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டு, 29.09.2020 அன்று மேற்படி 9 பள்ளி கட்டிடங்களும் பல்லடம் ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. ஒப்படைக்கப்பட்ட பள்ளிகளின் விவரங்கள் கீழ்க்காணுமாறு : -

(1) **ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, ப.வடுகபாளையம் :**

- வருவாய் கிராமம் – ப.வடுகபாளையம், புல எண்–30/3A
- பள்ளிக் கட்டிடம் – 5 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–4 எண்ணிக்கை, மங்களூர் டைல்ஸ் – 1 எண்ணிக்கை)
- சமையல் அறை கட்டிடம் – 1 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–1 எண்ணிக்கை)
- கழிப்பிட வசதி கட்டிடம் – 4 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை)
- மொத்தம் 10 கட்டிடங்களும் நல்ல நிலையில் உள்ளது.

(2) **ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி , கொசவம்பாளையம் :**

- வருவாய் கிராமம் – பல்லடம், புல எண்–374
- பள்ளிக் கட்டிடம் – 2 எண்ணிக்கை(ஆர்.சி.சி. கூரை–2 எண்ணிக்கை)
- சமையல் அறை கட்டிடம் –2 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–1 எண்ணிக்கை மற்றும் மங்களூர் டைல்ஸ் – 1 எண்ணிக்கை )
- கழிப்பிட வசதி கட்டிடம் –2 எண்ணிக்கை (திறந்தவெளி கட்டிடம்)
- மொத்தம் 6 கட்டிடங்களும் நல்ல நிலையில் உள்ளது.

(3) **ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, பி.டி.ஓ காலனி :**

- வருவாய் கிராமம் – பல்லடம், புல எண்–271/1, 229/2B
- பள்ளிக் கட்டிடம் – 3 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–2 எண்ணிக்கை, ஜி.ஐ. ஷீட் கூரை – 1 எண்ணிக்கை)
- சமையல் அறை கட்டிடம் – 1 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–2 எண்ணிக்கை)

- கழிப்பிட வசதி கட்டிடம் – 2 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–1 எண்ணிக்கை மற்றும்ஆர்.சி.சி. கூரையும் திறந்தவெளியும் கலந்தது 1 எண்ணிக்கை )
- மொத்தம் 6 கட்டிடங்களும் நல்ல நிலையில் உள்ளது.

**(4) <u>ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பல்லடம் கிழக்கு (ஜெயப்பிரகாஷ் வீதி) :</u>**

- வருவாய் கிராமம் – நாரணாபுரம், புல எண்– 862
- பள்ளிக் கட்டிடம் – 7எண்ணிக்கை(ஆர்.சி.சி.கூரை–7 எண்ணிக்கை)
- சமையல் அறை கட்டிடம் – 2 எண்ணிக்கை (ஆர்.சி.சி.கூரை–2 எண்ணிக்கை)
- கழிப்பிட வசதி கட்டிடம் – 2 எண்ணிக்கை (ஜி.ஐ. கூரை–2 எண்ணிக்கை)
- மொத்தம் 11 கட்டிடங்களில் 3 கட்டிடங்கள் பழுதடைந்துள்ளது.

**(5) <u>ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பல்லடம் மேற்கு (என்.ஜி.ஆர் சாலை – உழவர் சந்தை அருகில்) :</u>**

- வருவாய் கிராமம் – பல்லடம், புல எண்–262/12
- பள்ளிக் கட்டிடம் – 5 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–4 எண்ணிக்கை மற்றும் மங்களூர் டைல்ஸ் – 1 எண்ணிக்கை)
- சமையல் அறை கட்டிடம் – 2 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–2 எண்ணிக்கை)
- கழிப்பிட வசதி கட்டிடம் – 2 எண்ணிக்கை (ஏ.சி. சீட் கூரை–2 எண்ணிக்கை)
- ஸ்டேஜ் கட்டிடம் –1 எண்ணிக்கை (ஜி.ஐ. கூரை)
- மொத்தம் 10 கட்டிடங்களில் 2 கட்டிடங்கள் பழுதடைந்துள்ளது.

**(6) <u>ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, இராயர்பாளையம் :</u>**

- வருவாய் கிராமம் – நாரணாபுரம், புல எண்– 807
- பள்ளிக் கட்டிடம் – 4 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–3 எண்ணிக்கை மற்றும் மங்களூர் டைல்ஸ் – 1 எண்ணிக்கை)
- சமையல் அறை கட்டிடம் –2 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–2 எண்ணிக்கை)
- கழிப்பிட வசதி கட்டிடம் –2 எண்ணிக்கை (ஏ.சி. சீட் கூரை–1 எண்ணிக்கை, திறந்தவெளி கட்டிடம் – 1 எண்ணிக்கை)
- மொத்தம் 8 கட்டிடங்களும் நல்ல நிலையில் உள்ளது.

**(7) <u>ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி , சேடபாளையம் :</u>**

- வருவாய் கிராமம் – நாரணாபுரம், புல எண்–698
- பள்ளிக் கட்டிடம் – 3 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–2 எண்ணிக்கை மற்றும் மங்களூர் டைல்ஸ் – 1 எண்ணிக்கை)
- சமையல் அறை கட்டிடம் –3 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–3 எண்ணிக்கை)
- கழிப்பிட வசதி கட்டிடம் –2 எண்ணிக்கை (பாதி ஆர்.சி.சி. கூரை –1 எண்ணிக்கை, Pre Cast slab கட்டிடம் – 1 எண்ணிக்கை)

- மொத்தம் 8 கட்டிடங்களில் 1 மட்டும் பழுதடைந்துள்ளது.

**(8) <u>ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, அண்ணாநகர் :</u>**

- வருவாய் கிராமம் – பல்லடம், புல எண்– 309,489, 310
- அண்ணாநகர் ஊராட்சி ஒன்றி துவக்கப்பள்ளி கட்டிடங்கள் 3 இடங்களில் உள்ளது.

I. <u>அண்ணாநகர் கடைசி ஒரு பகுதி :</u>

- பள்ளிக் கட்டிடம் – 2 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை– 1 எண்ணிக்கை மற்றும் ஏசி ஷீட் கூரை – 1 எண்ணிக்கை)
- கழிப்பிட வசதி கட்டிடம் – 2 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை– 2 எண்ணிக்கை)

II. <u>அண்ணாநகர் கிணறு அருகில் :</u>

- பள்ளிக் கட்டிடம் – 1 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை– 1 எண்ணிக்கை மற்றும் ஏசி ஷீட் கூரை – 1 எண்ணிக்கை)
- கழிப்பிட வசதி கட்டிடம் – 1 எண்ணிக்கை (ஏ.சி. ஷீட் கூரை– 1 எண்ணிக்கை)

III. <u>அண்ணாநகர் ஓம் சக்தி கோவில் அருகில் :</u>

- பள்ளிக் கட்டிடம் – 1 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை– 1 எண்ணிக்கை)
- கழிப்பிட வசதி கட்டிடம் – 1 எண்ணிக்கை (ஏ.சி. ஷீட் கூரை – 1 எண்ணிக்கை)
- மொத்தம் 8 கட்டிடங்களும் நல்ல நிலையில் உள்ளது.

**(9) <u>ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கல்லம்பாளையம்புதூர் :</u>**

- வருவாய் கிராமம் – நாரணாபுரம், புல எண்– 215
- பள்ளிக் கட்டிடம் – 5 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–4 எண்ணிக்கை மற்றும் ஜி.ஐ. ஷீட் கூரை – 1 எண்ணிக்கை)
- சமையல் அறை கட்டிடம் – 1 எண்ணிக்கை (ஆர்.சி.சி. கூரை–1 எண்ணிக்கை)
- கழிப்பிட வசதி கட்டிடம் – 1 எண்ணிக்கை (திறந்தவெளி கட்டிடம்)
- மொத்தம் 7 கட்டிடங்களும் நல்ல நிலையில் உள்ளது.

<u>கூடுதல் விவரங்கள்</u> :

- மேற்கண்ட 9 பள்ளிகளில் பி.டி.ஓ காலனி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் மட்டும் முன்பக்கம் சுற்றுச்சுவர் இல்லை. மற்ற அனைத்து பள்ளி கட்டிடங்களிலும் சுற்றுச்சுவர், மின்சார வசதி மற்றும் குடிநீர் வசதி உள்ளது.
- அனைத்து பள்ளி கட்டிடங்களின் நீளம், அகலம் வரைபடத்துடன் சரி பார்க்கப்பட்டதில் அளவீடுகள் சரியாக உள்ளது.
- பள்ளி கட்டிடங்கள் மட்டும் ஒப்படைப்பு செய்யப்படுகிறது.
- பள்ளிகள் அமைந்துள்ள இடங்கள் அனைத்தும் அரசு நிலம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த மேற்கண்ட 9 பள்ளிகளையும் பல்லடம் நகராட்சி வசம் பெற்றுக்கொள்ளவும், அனைத்து பள்ளிகளின் பெயர்களையும் நகராட்சி பள்ளிகளாக பெயர் மாற்றம் (Nomenclature) செய்யவும், நகராட்சியில்

வசூலிக்கப்படும் சொத்து வரியில், நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று, உரிய சதவிகித நிதி கூறினை (Component) கல்வி நிதி கணக்கு தலைப்பில் செலுத்த அனுமதியும், அந்நிதியிலிருந்து பள்ளிக்கான அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்: 887/2020/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 14</u>

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2020–2021ன் கீழ் கீழ்க்காணும் 4 பணிகளுக்கு 29.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | அண்ணா பேருந்து நிலையத்திற்கு எதிர்புறம் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான மயானத்தின் நான்கு பக்கமும் சுற்றுச்சுவரை உயர்த்தவும், புதியதாக மின் விளக்குகள் அமைக்கவும், தரைத்தளக் கற்கள் பதிக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள ஆழ்துளைக் கிணற்றிலிருந்து மயானம் வரை குழாய் அமைத்து பிவிசி டேங்க் அமைத்தல் | 10.00 | திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.11% குறைவு |
| | | | திருவாளர்கள். டி.ஆர். கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், ஒட்டச்சத்திரம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.24% அதிகம் |
| 2 | நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பாய்லர் புதிதாக சப்ளை செய்தல் மற்றும் கிரைண்டர் பழுது பார்த்தல் | 1.00 | திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவு |
| | | | திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.31% அதிகம் |
| 3 | வார்டு எண் :08 பனப்பாளையம் பழனிக் கவுண்டர் வீதியில் உள்ள குடிநீர் அல்லாத உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் மேல்நிலைத் தொட்டியை பராமரிப்பு பணி மேற்கொண்டு வர்ணம் பூசுதல் | 0.65 | திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவு |
| | | | திருவாளர்கள். டி.ஆர். கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், ஒட்டச்சத்திரம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.53% அதிகம் |
| 4 | வார்டு எண் :08 பனப்பாளையம் பழனிச்சாமி நகரில் ஏற்கனவே உள்ள ஆழ்துளைக் கிணற்றில் புதியதாக மின்மோட்டார் மற்றும் UPVC குழாய் பொருத்துதல் | 1.80 | திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.64% அதிகம் |
| | | | திரு.R.குமாரசாமி, ஒப்பந்ததாரர், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவு |

(ந.க.எண்: 1040/2020/இ1)

மேற்காணும் 4 பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 15

பல்லடம் நகராட்சி வார்டு எண் :13 ராம் நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் சீரான முறையில் தண்ணீர் வரவில்லை என அப்பகுதி பொதுமக்கள் நேரில் வந்து தெரிவித்தனர். எனவே அதன் அடிப்படையில் ஆங்காங்கே Trial Pit தோண்டி பார்க்கப்பட்டது. மேற்கண்ட குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கப்பட்டு 8 ஆண்டுகளுக்கு மேல் ஆனதாலும், ஆங்காங்கே பைப் அமிந்த நிலையில் உள்ளதாலும், குடிநீர் சீரான முறையில் அனைத்து பகுதிகளுக்கும் செல்வதில்லை. இதனை கருத்தில் கொண்டு மேற்கண்ட பகுதியில் புதியதாக பைப் லைன் அமைத்தால், அப்பகுதி பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகிக்க முடியும்.எனவே, ராம் நகர் மெயின் சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1088/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 16

பல்லடம் நகராட்சி வார்டு எண் :02,03,05,06,12 மற்றும் 17 ல் உள்ள மேற்குபல்லடம் அரிசன காலனி, பள்ளிவாசல் வீதி, சேடபாளையம் முத்துக் கவுண்டர் வீதி, பச்சாபாளையம் மந்திரி கவுண்டர் வீதி, இரகீம் சாகிப் வீதி, தர்கா விதி, கொசவம்பாளையம் போயர் வீதி, காமராஜர் நகர் மற்றும் நாரணாபுரம் பகுதிக்கு ஆழ்துளைக் கிணற்றிலிருந்து இதர பயன்பாட்டிற்கு ஜி.ஐ இரும்பு குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த இரும்பு குழாய் அமைக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால், தற்போது துருப்பிடித்து உடைந்த நிலையில் உள்ளதால், ஆழ்துளைக் கிணற்று நீர் சரிவர விநியோகம் செய்ய இயலவில்லை. மேலும், தண்ணீர் வீணாக செல்கிறது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் உள்ள மிகவும் பழுதடைந்த ஜி.ஐ. பைப்களை அகற்றி புதியதாக பிவிசி குழாய் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1088/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 17

பல்லடம் நகராட்சி வார்டு எண் :06 பச்சாபாளையம் மயானத்தின் முன்பகுதியில் சுற்றுச்சுவர் இல்லாததால் ஆங்காங்கே புதைத்து வருகின்றனர். எனவே, மேற்கண்ட இடத்தில் முன் பகுதி புதியதாக சுவர் அமைத்து அதற்கு நுழைவு வாயில் கேட் அமைக்கவும், கிழக்கு பகுதியில் கம்பி வேலி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1088/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 18

அரசு ஆணை எண் :162, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்1/துறை/ நாள் : 11.08.2010 ல் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் 965 குடியிருப்புகளுக்கு கூடுதல் குடிநீர் வழங்குவதற்கான குடிநீர் விரிவாக்கத் திட்டத்திற்கான சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT) 2010–11 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் விரிவாக்கப் பணி மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் 2015 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு, குடிநீர் திட்டம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

மேற்கண்ட குடிநீர் திட்டத்திற்கு பல்லடம் நகராட்சி பகுதிக்கு மட்டும் மத்திய அரசால் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட தொகை ரூ.1746.77 இலட்சம் ஆகும். (மத்திய அரசு மற்றும் தமிழக அரசு மான்யம் – 561.47 இலட்சம், வட்டியில்லா கடன் தொகை – ரூ.240.63 இலட்சம் மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை – 944.67 இலட்சம்). தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கண்ட திட்டப் பணி முடிக்கும் போது, பல்லடம் நகராட்சிக்கு மட்டும் ரூ.1788.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை விட கூடுதலாக ரூ.41.73 இலட்சம் செலவிடப்பட்டுள்ளதால், மீத செலுத்த வேண்டிய நகராட்சியின் பங்களிப்பு நிலுவைத் தொகையினை செலுத்துமாறு நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,கோவை அவர்களின் கடித ந.க.எண் :2310–7/கோ.பல்லடம்/இவஅ1/2020 நாள் :17.07.2020 கடிதத்தில் ஒப்பந்ததாரருக்கு பட்டியல்கள் பட்டுவாடா செய்ய வேண்டியுள்ளதால் மேற்கண்ட தொகையினை செலுத்துமாறு கோரியுள்ளார். மேற்கண்ட குடிநீர் திட்டத்தின் மூலமாகவே பல்லடம் நகராட்சி மக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பல்லடம் பொதுமக்கள் நலன் கருதி, குடிநீர் தடையின்றி பெற ஏதுவாக மீதம் செலுத்தப்பட வேண்டிய நகராட்சியின் பங்குத் தொகை ரூ.41.73 இலட்சத்தை நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பெருந்திட்டக் கோட்டம், கோவை அவர்களுக்கு செலுத்துவதற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 1173/2010/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட தொகையான ரூ.41.73 இலட்சத்தை நகராட்சி பொதுநிதி அல்லது குடிநீர் இணைப்பிற்காக பெறப்படும் வைப்புத் தொகையிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 19</u>**

பல்லடம் நகராட்சியில் கணினி தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு கணினி உதவி அமைப்பாளரோ, புள்ளி விபரக்குறிப்பாளரோ எவருமில்லை. ஆதலால், இவ்வலுவலக கணினி தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மானத்துடன் தினக்கூலி வெளிக்கொணர்வு ஒப்பந்த அடிப்படையில் இரண்டு கணினி தெரிந்த பணியாளர்களை கொண்டு 2013ம் ஆண்டு முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகர்மன்றத் தீர்மானம் எண்: 223, நாள் : 18.10.2019ல் ஏற்கனவே வெளிக்கொணர்வு அடிப்படையில் ஒப்பந்தம் எடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் திருமதி.ஆர்.கிருத்திகா, என்பவருக்கு 01.10.2019 முதல் 30.09.2020 வரை ஓராண்டிற்கு ஒப்பந்தத்தை நீட்டித்து அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் தடை உத்தரவு உள்ளதால், கணினி உதவி அமைப்பாளரோ, புள்ளிவிபரக்குறிப்பாளரோ எவருமில்லை என்பதால், கணினி பணியின் அவசர அவசியத்தை கருதி ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு 01.10.2020 முதல் 30.09.2021 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டித்துக் கொள்ளவும், அதற்காகும் செலவினத்தொகை ரூ.3,85,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இரண்டு கணினி பணியாளர்கள் வெளிக்கொணர்வு அடிப்படையில் வழங்கிவரும் ஒப்பந்ததாரர் திருமதி.ஆர்.கிருத்திகா, 45, மங்கலம் ரோடு, பல்லடம் என்பவருக்கு மேலும் ஒரு வருட காலத்திற்கு ( 01.10.2020 முதல் 30.09.2021 வரை) ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து அதற்கான செலவினத்தொகை ரூ.3,85,000 /- னை பொது நிதியிலிருந்து செலவிட அனுமதிக்கலாம்.

**<u>பொருள் : 20</u>**

பல்லடம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தி வரும் பவர் ஸ்பிரேயர்கள் (Power Sprayers) மற்றும் புகை அடிக்கும் இயந்திரங்களில் (Fogging Machines) ஏற்பட்டுள்ள சிறு பழுதுகள் மற்றும் உதிரி பாகங்களை மாற்றி சரி செய்ய 04.09.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன :-

| | | |
|---|---|---|
| 1 | முருகன் ஸ்பிரேயர் அன்ட்<br>ஆட்டோ மொபைல்ஸ்<br>மங்கலம் சாலை,<br>பல்லடம் | 16,100/- |
| 2 | ஸ்ரீ வேலவன் ஸ்பிரேயர்<br>ஸ்ரீ வேலவன் ஆட்டோ மொபைல்ஸ்<br>கோவை – திருச்சி சாலை,<br>பல்லடம் | 15,700/- |

| | | |
|---|---|---|
| 3 | ஸ்ரீ அம்பிகா ஸ்பிரேயர் அன்ட் ஆட்டோ மொபைல்ஸ் 56/29, லட்சுமி காம்ப்ளக்ஸ் , பஸ் நிலையம் எதிரில் பல்லடம். | 13,700/- |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ஸ்ரீ அம்பிகா ஸ்பிரேயர் அன்ட் ஆட்டோ மொபைல்ஸ், பல்லடம் அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்கவும், அதற்கான தொகை ரூ.13,700 /- ஐ வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 1072/2020/எச்1)

**<u>பொருள் : 21</u>**

பல்லடம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், மாதப்பூர் MCC ல் மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை உரமாக மாற்ற பயன்படுத்தி வரும் Baling Machine க்கு தேவையான பிளாஸ்டிக் நாடா (Plastic Tape), Clamp Pin ஆகியவற்றை விநியோகம் செய்ய 11.09.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன :-

| வ.எ | பெயர் மற்றும் முகவரி | டேப்ரோல் (ஒன்றுக்கான) தொகை ரூ | கிளிப் (ஒன்றுக்கான) தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | பி.என்.கே சிவகலா ஸ்டோர்ஸ், 115, திருச்சி ரோடு, பல்லடம் | 280 | 200 |
| 2 | ஏ.எம்.எஸ் பாலிபேக் 12, அண்ணா வணிக வளாகம், என்ஜிஆர் ரோடு, பல்லடம் | 275 | 196 |
| 3 | எம்.பி.என்.ஸ்டோர்ஸ் 65, பி.என்.கே காம்ப்ளக்ஸ், திருச்சி ரோடு, பல்லடம் | 265 | 190 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் எம்.பி.என்.ஸ்டோர்ஸ், பல்லடம் அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்கவும், அதற்காகும் மாதாந்திர செலவின தொகை ரூ.12,000/- (265 x 26 = 6890 (ம) 190 x 26 = 4940) வீதம் 12 மாதங்களுக்கான தொகை ரூ.1,44,000/- ஐ பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 1119/2020/எச்1)

**பொருள் : 22**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் : **29280/2020**/WB, நாள் : **25.09.2020** ல் பல்லடம் நகராட்சியில் UTIS Connectivity , VPN பயன்படுத்திய காலத்திற்கான தொகையினை கீழ்கண்டவாறு BSNL நிறுவனத்திற்கு ECS வாயிலாக செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பயன்படுத்திய விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | **01.10.2019** முதல் **31.10.2019** வரை | **48295** |
| 2 | **01.01.2020** முதல் **31.03.2020** வரை | **48295** |
| | மொத்தம் | **96590** |

மேற்கண்ட தொகை ரூ.**96,590**/- ஐ Accounts Officer, BSNL, Tamil Nadu Circel, கணக்கு எண் : **603805009685**, ஐசிஐசிஐ வங்கி, மவுண்ட் ரோடு கிளை, IFSC Code : ICIC0006038, என்ற கணக்கில் ECS வாயிலாக வரவு வைக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்கண்ட தொகை ரூ. **96,590**/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**1.**அனுமதிக்கலாம்.

**2.** தனி அலுவலரின் முன் அனுமதியை எதிர்நோக்கி தொகை வழங்கலாம்.

**தனி அலுவலர்/**
**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**